
செப்டம்பர் 2022

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

மாணவ இலக்கிய மின்னிதழ்



தமிழ்த்துறை

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு


சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.



குடில் 4

விருந்து 14

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் : 4 செப்டம்பர் 2022 விருந்து : 14

## தமிழ்த்துறை

### சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.**

# நற்றமிழ்க்குடில்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் குழு | : | ரா. பிரியதர்ஷினி<br>இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு<br><br>பா. பவித்ரா<br>இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு<br><br>மோ. ஐஸ்வரியா<br>முதுகலைத்தமிழ், முதலாமாண்டு<br><br>வி. மாரிகவிதா<br>இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு<br><br>து. லீலாவதி<br>இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு |
| ஆலோசனைக் குழு | : | டாக்டர் சேது குமணன்<br>கல்லூரித் தலைவர்<br><br>முனைவர் மீரா முருகேசன்<br>கல்லூரி முதல்வர்<br><br>முனைவர் கண்மணி சுப்பிரமணியன்<br>கல்லூரித் துணை முதல்வர்<br><br>முனைவர் தே. இராணி எலிசபெத்<br>தமிழ்த்துறைத் தலைவர்<br><br>தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு<br>சோகா இகெதா கலை மற்றும்<br>அறிவியல் மகளிர் கல்லூரி<br>சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,<br>சென்னை 600 099. |
| Blog | : | sokatamil blogspot.com |
| Facebook | : | Soka Tamil Avai |
| Youtube | : | Sokatamilavai |
| E.mail | : | sokatamilavai2021@gmail.com |

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் : 4

விருந்து : 14

செப்டம்பர் 2022

# உள்ளே....

தலையங்கம்
மலரே
கட்டுரைகள்
நூல் அறிவோம்
பழமொழி நுண்பொருள்
அறிவியல் செய்திகள்
உணவே மருந்து
விடுகதைகள்
பண்டிகைகள் வரலாறு
பொன்மொழிகள்
கடித இலக்கியம்
சிறுகதை
சொல் விளையாட்டு
கவிதைகள்
தகவல் களஞ்சியம்
தூரிகைத் தூரல்கள்
துறை நிகழ்வுகள்

# தலையங்கம்



மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது சான்றோர் வாக்கு. வாழ்க்கையில் ஒழுக்கம், நற்பண்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்குக் கற்பித்து, வாழ்க்கையின் வழிகாட்டியாக நின்று, ஒவ்வொரு மாணவரையும் சிறந்த மனிதராக்குவது ஆசிரியர்களே.

எப்போதும் ஒருவரைப் புதுமையான ஒன்றை அறிய செய்பவர் ஆசிரியர்.

புதுமைக்குத் தோற்றுவாய் ஆசிரியர். "சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்" என்ற பழமொழிக்கேற்ப மனிதன் ஆறறிவுடன் பிறந்து இருந்தாலும், அவ்வறிவை மேம்படுத்தும் தூண்டுகோல் ஆசிரியர்களே.

உலகில் கற்க வேண்டியது ஆயிரம் இருந்தாலும், எவை கற்க உகந்தது என நல்லது கெட்டதைப் பிரித்து, நல்லவற்றைக் கற்பித்து, நம்மை நாடறியச் செய்பவர்கள் ஆசிரியர்கள். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான நடைமுறை பழக்கவழக்கங்களை நம்முள் வடிவமைப்பவர் ஆசிரியர்.

மனதால் யாரையும் புண்படுத்தாத புத்தகமாகவும்; கல்விக் கர்ணனாகவும்; அறிவின் ஞானியாகவும்; அறிவை ஊட்டும்

அன்னையாகவும்; கண்ணைப் பாதுகாக்கும் இமையாகவும்; இன்னொரு பெற்றோராகவும் இருப்பவர்கள் ஆசிரியர்கள்.

**“எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்”**

என ஆத்திச்சூடியில் பாடி இருக்கிறார் அவ்வையார். ஆசிரியர் என்பவர் இறைவனுக்குச் சமமாக வைத்துப் பார்க்கப்படுபவர். அந்த வகையில் மனித வாழ்க்கை எனும் வண்டியில் அச்சாணியாக இருந்து சமுதாய வளர்ச்சிக்குத் துணை நிற்பவர்கள் ஆசிரியர்கள்.

ஒரு மாணவனை தன்னம்பிக்கை மிக்க மனிதனாக்குபவர்கள் ஆசிரியர்கள். மனித வாழ்வில், ஆசிரியர்கள் பெரும் பங்கு வகிக்கிறார்கள். ஆசிரியர்களைப் போற்றும் வகையில் அவர்களுக்குத் தமிழக அரசு “நல்லாசிரியர் விருது” வழங்கிச் சிறப்பிக்கிறது.

நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் சான்றோர்களை உருவாக்கியவர்கள் ஆசிரியர்கள். குற்றமில்லாதவர்களாகவும்; குற்றம் களைபவர்களாகவும் விளங்கும் ஆசிரியர்களைப் போற்றுவதற்கு ஆண்டில் ஒரு நாள் போதாது.

மாணவர்களாகிய நாம் ஆசிரியர்களுக்கு வழங்கும் ஒரு நற்பேறு, அவர்களிடமிருந்து நல்லனவற்றைக் கற்று வீட்டையும் நாட்டையும் முன்னேற்றுவதே.

**ஏற்றிவிடும் ஏணியை**
**எந்நாளும் மறவோம்!**
**நாமும் ஏணியாவோம்!**

பா. பவித்ரா
இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு



## மலரே....

# கொன்றை மலர்

குறிஞ்சிப்பாட்டில் பெண்கள் தொகுத்து விளையாடிய 99 வகை மலர்களுள் 89ஆவது இடத்தில் கொன்றை மலர் உள்ளது.

கொன்றை மலர் கேரளாவின் மாநில மலராகவும்; தாய்லாந்தின் தேசியப் பூ மற்றும் மரமாகவும் உள்ளது. கொன்றை மலர் சித்திரை மாதத்தில் மட்டும் பூப்பதால், சித்திரையை வரவேற்கும் விதமாகச் சரம் சரமாகக் கொன்றை மலர்கள் மலர்வதாகக் கருதப்படுகிறது.

இது ஆயுர்வேத மருத்துவத்தில் தங்க மழை மரம் “அரக்வதா” என்று அழைக்கப்படுகிறது. கொன்றை பூ, இலை, காய் மற்றும் மரப்பட்டைகள் மருத்துவப் பயன்கள் உடையன. சர்க்கரை நோய், வயிற்றுக் கோளாறு, காது வலி, வயிற்றுப் பூச்சி போன்ற வியாதிகளுக்குக் கொன்றை மருந்தாகப் பயன்படுகிறது. சிவனின் பூசைக்கு உகந்த மலராகக் கருதப்படுகிறது. “மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை அணிந்தவனே” எனும் பாடல் வரிகள் கொன்றை மலர் சிவனுக்குரியது என்பதை உணர்த்துகிறது.

சங்க இலக்கியத்தில் முல்லை நிலத்திற்குரிய மலராகக் கருதப்படுகிறது.

கதுப்பின் தோன்றிய புதுப்பூன் கொன்றைக்
கானம் காரெனக் கூறினும் (குறு. 21)

பொன் என கொன்றை மலர (நற். 242)

கொன்றை அம் தீம் குழல் மன்று - தோறும் இயம்ப (நற். 364)

காசின் அன்ன போது ஈன் கொன்றை (குறு. 143)

கோது குலாவிய கொன்றை குழல் சடை (திரு. 16)

சொரியும் கொன்றையும் தோன்றிட சென்றனர் தூயோர் (சீறா. 2678:4)

கொன்றை மலர் கார் காலத்தில் மலரும். இதன் காய் நீளமான துளையுடையது. இதன் மொட்டுகள் அந்தக் காலத்துப் பொற்காசுகளைப் போன்றிருக்கும் என மலர் பற்றிய செய்திகளையும் கொன்றை வெவ்வேறு இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கின்றதையும் இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது.



நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, ஐந்திணை, ஏலாதி, கைந்நிலை, திருவாசகம், தேவாரம், திருமந்திரம், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், சீறாப்புராணம், வில்லிபாரதம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, கம்பராமாயணம் ஆகிய இலக்கியங்களில் கொன்றை மலர் இடம்பெற்றுள்ளது.



சா. யோகேஸ்வரி

முதுகலைத்தமிழ், இரண்டமாண்டு

# கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

கட்டுரைகள்

பெற்ற பிள்ளை உன்னைக் கைவிட்டாலும் கற்ற கல்வி உன்னைக் கைவிட்டாலும் நீ பழகிய கைத்தொழில் உன்னைக் கைவிடாமல் காப்பாற்றும் என்பது ஆன்றோர் வாக்கு. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்தி நிற்கிறது.

## கைத்தொழிலின் அவசியம்

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது, புள்ளிகணக்கு வாழ்க்கைக்கு உதவாது என்பார்கள். அது உண்மையே. நாம் கற்கும் கல்வி நமக்கு ஏதாவதொரு வேலையினைப் பெற்றுத்தரலாம் அல்லது வேலை கிடைக்காத நிலையும் ஏற்படலாம். அழகான இந்த உலகில் வேலையைத் தேடி அலையும் போது எதிர்காலத்திற்கு ஒரு கைத்தொழிலைக் கற்றிருக்கலாமே என்று சிந்திப்போம்.

"கைத் தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"

என்கிறார் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.

கவிஞர்கள் பலரும் தம் கவிதைளில் தன் கையே தனக்கு உதவி என்பதை வலியுறுத்துகின்றனர். பட்டங்கள் ஆயிரம் பெற்று

உயர் பதவிகள் அடைந்தாலும் கைத்தொழில் கற்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

## கைத்தொழில் வகைகள்

கைத்தறி நெசவு, பாய் பின்னுதல், கூடை பின்னுதல், தச்சு வேலை, கயிறு திரித்தல், மட்ப்பாண்டம் செய்தல், தீப்பெட்டி செய்தல், தேனீ வளர்த்தல், அலங்காரப் பொம்மைகள் செய்தல், கைவினைப் பொருட்கள் செய்தல், மின்னணு சாதனங்கள் பழுதுபார்த்தல், துணித் தைத்தல், கைப்பேசி பழுதுபார்த்தல் எனப் பலவகை தொழில்கள் உள்ளன.

மேற்குறிப்பிட்ட பல தொழில்கள் குறிப்பிட்ட சில பகுதிகளில் பாரம்பரியமாக ஊர் மக்களால் தலைமுறை தலைமுறையாகச் செய்யப்படுபவை ஆகும். கல்வி பெற்று உயர் வேலையில் அமர வேண்டும், பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் எனும் நோக்கில் பெற்றோர் குழந்தைகளுக்குத் தங்கள் சுயத்தொழிலைக் கற்பிக்காமல் வளர்த்துவிடுகின்றனர். வாய்ப்பு கிட்டுமானால் நம் மரபுவழித் தொழிலைக் கட்டாயம் கற்க வேண்டும். அது தொழில் அழிவைக் காப்பதோடு நம்முடையது என்ற மகிழ்வைவும் அளிக்கும்.

## கைத்தொழிலின் பயன்கள்

கைத்தொழில் கற்றால் படித்து வேலை கிடைக்கவில்லையே என்று ஏங்கி தவிக்கத் தேவையில்லை. கைத்தொழில், கற்ற

உடன் பணி வாய்ப்பை ஏற்படுத்தித் தரும். கற்ற தொழில் நம் வீட்டிற்குப் பயன்படுவதோடு வருவாயையும் பெருக்கும். கைத்தொழில்களை நாம் கற்று, பிறர்க்கு அதனைக் கற்றுக் கொடுத்தும் பொருள் ஈட்டலாம். குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் பெறலாம்.

## கைத்தொழிலால் தோன்றிய கல்வி

தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, சிறு தொழில் கல்வி ஆகியவை எல்லாம் கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டே தொடங்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில் பயிற்சிக் குழு, பயிற்சிகாகக் கைத்தொழில்கள் பலவற்றை இன்று தொழிற்கல்வி நிலையங்களில் கற்றுக் கொடுக்கின்றனர்.

வறுமையினால் பசி என்று வரக்கூடிய ஒருவருக்கு, ஒரு மீனைக் கொடுப்பதைவிட மீன்பிடிக்கக் கற்றுக் கொடுத்து, ஒரு தூண்டிலை வாங்கி கொடுக்கலாம். அதுதான் அவருடைய வறுமையைப் போக்கும். இதுதான் கைத்தொழிலின் சிறப்புமாகும்.

கைத்தொழில் கற்போம்!!!
கவலை இல்லாமல் வாழ்வோம்!!!
கைத்தொழிலைக் கற்றுக் கொடுப்போம்!!!
வறுமையில்லாமல் வாழ வைப்போம்!!!

மு.ஹரிணி
இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு

# நூலகம்

“நூலகம் அறிவின் ஊற்று”

“வீட்டிற்கு ஒரு நூலகம் அமைப்போம்”

என்றார் பேரறிஞர் அண்ணா. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது போல நூலகம் இல்லாத ஊரும் பொலிவிழந்ததாகவே இருக்கும். சமூகத்தின் அறிவுக் கருவூலம் நூலகங்களாகவே விளங்குகின்றன. வீட்டிற்கு ஒரு நூலகம் அமைக்காவிட்டாலும் ஊரில் உள்ள ஒரு நூலகத்தையாவது நாம் பயன்படுத்த வேண்டும். நூலகத்தைப் பயன்படுத்தும் முன் நூலகத்தைப் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்வோம்.




## நூலகத்தின் தேவை

சாதாரண மாணவர்களையும் சாதனையாளர்களாக உயர்த்துவது நூலகம். ஏழை மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் படிப்பதற்குத் தேவையான நூல்களை விலை கொடுத்து வாங்க முடியாத நிலையில் நூலகங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. அன்றாட செய்திகளை அறிந்துகொள்ள செய்தித்தாள்களைக்கூட வாங்க இயலாத நிலை உள்ளவர்களும்

இலவசமாக நூல்களைப் படிக்க, தகவல்களைத் தெரிந்துக்கொள்ள, தங்கள் அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள நூலகங்கள் தேவைப்படுகின்றன.

**நூலக வகைகள்**

மாவட்ட மைய நூலகம், மாவட்டக் கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம், தனியார் நூலகம், கல்லூரி நூலகம், பல்கலைக்கழக நூலகம், நடமாடும் நூலகம், மின் நூலகம் எனப் பல வகையான நூலகங்கள் உள்ளன.



**நூலகத்தில் உள்ளவை**

“அறிவு பசிக்கு உணவு, நூலகம்” தமிழ் மற்றும் ஆங்கிலக் கதை, கட்டுரை, ஆய்வு நூல்கள், வரலாற்று நூல்கள், அறிவியல் நூல்கள், தொழில்நுட்பம், போட்டித் தேர்வு நூல்கள், நாளிதழ்கள், வார இதழ்கள், அகராதிகள், களஞ்சியங்கள் போன்ற பல நூல்கள் உள்ளன. மேலும், நூல்கள் அனைத்தும் கல்வி, பொருளியல், உலகியல், பொறியியல் எனத் துறை வாரியாகப் பகுத்து வைக்கப்பட்டிருக்கும்.

**படிக்கும் முறை**

நூலகத்தில் நூல்களை எடுத்து அமைதியாக, படிப்பதற் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அமர்ந்து படிக்க வேண்டும்.

நூல்களைக் கிழிக்கவோ சேதப்படுத்தவோ கூடாது. படித்து முடித்தவுடன் மீண்டும் உரிய இடத்தில் நூலை வைக்க வேண்டும். நூலகத்தின் உறுப்பினர் அட்டை வைத்திருந்தால் தேவைப்படும் நூல்களை, நூலக விதிமுறைகளுக்கு உட்பட்டு கடனாகப் பெற்று வரலாம். பெற்ற நூல்களைக் குறிப்பிடப்பட்ட நாளில் மீண்டும் நூலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

### முடிவுரை

"நம் அகம் நூலகம்"

"நூலகம் அறிஞர்களின் வாழ்வு இல்லம்"




நாளும் நூல் பல கற்று, சிறந்த மனிதன் ஆக, நூலகம் துணை செய்கிறது. நூல்கள் மனிதனை முழுமையடையச் செய்கிறது. வாசிக்கும் பழக்கம் குறைந்து வரும் இந்தக் காலத்தில், வருங்காலத் தலைமுறையினருக்கு நூலகத்தை அறிமுகம் செய்து வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

நூலகம் தேடிச்சென்று நூல்களைப் படிப்போம்!

நாளும் வாழ்வில் உயர்வோம்!

ஏ. இளமதி
இளங்கலைத் தமிழ்
இரண்டாமாண்டு

## பழமொழி நுண்பொருள்

**நல்ல மாட்டுக்கு ஒரு சூடு - நல்ல மாட்டுக்கு ஒரு சுவடு**

**பொருள்**

நாம் எதாவது ஒரு செயலைத் தவறாகச் செய்தால் நமது பெற்றோர் அல்லது யாராவது ஒருவர் நம் தவறை உணர்த்துவர். அப்பொழுதும் நாம் நம் தவறைத் திருத்தாமல் மீண்டும் செய்தால் நல்ல மனிதனுக்குத் தன் தவறைத் திருத்த ஒரு வாய்ப்பு போதுமானது என்பதை நம்மிடம், நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்று கூறி, நம் தவறை மீண்டும் சுட்டிக் காட்டுவர். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. நல்ல மனிதனுக்கு ஒரு சொல். ஒரு முறை சொன்னவுடன் அதனை அறிந்து, புரிந்து செயல்பட வேண்டும் என்பர்.

**உண்மைப் பொருள்**

பண்டைய காலங்களில் விவசாயிகள் சந்தையில் காளை மாடு வாங்கும் போது அதன் வலிமையை ஆராய்வதற்காக, அதை நடக்க வைப்பர். அந்த மாட்டின் முழு வலிமையையும் ஒரு கால் தடத்தில் அறிய முடியும். மாட்டின் கால் தடத்தின் ஆழத்தை வைத்து அதன் வலிமையை அறிந்து கொள்வர். இதனையே நல்ல மாட்டுக்கு ஒரு சுவடு என்பர். சுவடு என்பது சூடு என மருவி வழங்கப்படுகிறது. இரண்டையும் ஏற்போம்.


ல. ஆரோக்கிய எஸ்தர்
இளம் கணினி அறிவியல், முதலாமாண்டு

**நூல் நயம் பாராட்டல்**

# வெற்றி நிச்சயம் மாணவர்களுக்கு

**வெ. இறையன்பு**

இந்திய ஆட்சிப்பணி அதிகாரியாகப் பணியாற்றிய வெ.இறையன்பு அவர்கள் சிறந்த எழுத்தாளர், கல்வியாளர், தன்னம்பிக்கைப் பேச்சாளர். இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். அதில் ஒன்றுதான் "வெற்றி நிச்சயம் மாணவர்களுக்கு" எனும் நூல். 2019ஆம் ஆண்டு வெற்றி நிச்சயம் என்ற நூலின் முதல் பதிப்பானது கற்பகப் புத்தகாலயத்தால் வெளியிடப்பட்டது. இந்நூலின் வாயிலாக ஆசிரியர் மாணவச் சமூகத்திற்குச் சொல்ல விரும்பும் செய்தியையும் நூலின் தன்மையையும் காண்போம்.




வெற்றி நிச்சயம் நூலில் ஆசிரியர் மாணவனின் தொலைநோக்குப் பார்வையைத் தேர்ந்தெடுக்கும் பருவம் பதின்மப் பருவம். இதனைப் பதியம் போடும் பருவம் என்கிறார். இந்தப் பருவத்தில் நல்ல எண்ணங்களையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் செதுக்கிச் செம்மைப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, மாணவர்களை வெற்றியின் பாதைக்கு அழைத்துச் சென்று

படிப்பவர்களுக்கு ஆர்வத்தைக் கூட்டும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

வாழ்க்கையில் விழிப்புணர்வுடன் இருப்பதற்கான பத்து செயல்களை ஆசிரியர் கூறியிருக்கிறார். அவை,

- சுய விழிப்புணர்வு (சுயமறிதல்)
- பிரச்சினையைத் தீர்த்தல்
- முடிவெடுத்தல்
- அலசி ஆராய்தல்
- படைப்பாக்கச் சிந்தனை
- உறவு மேலாண்மை
- உணர்ச்சி மேலாண்மை
- அடுத்தவர் நிலையில் ஆய்தல்
- சிறந்த தகவல் தொடர்பு
- பதற்ற மேலாண்மை

ஆகிய குணநலன்கள் மனிதனை மேம்படுத்தும் என்கிறார்.

இதில் ஒவ்வொரு தகவல்களும் மாணவர்கள் அன்றாட வாழ்க்கையில் செய்யக்கூடிய செயல்களை ஒப்பிட்டு எழுதப்பட்டுள்ளது.

இந்நூலில், இறுதியாகக் கல்லூரிப் பருவத்தில் தகவல் பரிமாற்ற திறமையை வளர்க்க சில வழிமுறைகளையும் கூறுகிறார். அவை,

- நிறைய புத்தகங்களை வாசிக்க வேண்டும்.

- ஒரு வாரத்திற்குக் குறைந்தபட்சம் இரண்டு நூல்களையாவது படிக்க வேண்டும்.
- பலரோடு பேசிப் பழக வேண்டும்.
- செயல் திறனை மேம்படுத்த வேண்டும்.
- தகவல் தொடர்பு பற்றிய படங்களைப் பார்க்க வேண்டும்.
- ஆங்கிலத்தில் பேசி பழகுவது அவசியம்.
- உயர்ந்த இலக்கியங்களைப் படிக்க வேண்டும்.
- திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டும்.

கல்லூரிப் பருவத்தில் நம் ஆற்றலை இந்த முக்கிய திறன்களில் குவிப்பது அவசியமானது என்கிறார்.

மாணவர்களுக்கு அச்சம் ஒருபோதும் இருக்கக் கூடாது என்று, இந்த நூலைப் படித்தப்பின் நான் உணர்ந்தேன். ஒவ்வொரு மாணவரும் இந்த நூலினைப் படித்து, அதில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளின்படி நடந்துக் கொண்டால் வாழ்வில் வெற்றி நிச்சயம்.

நான் புரிந்துக் கொண்டேன்.

நீங்களும் ஒருமுறை வாசிக்கலாமே!

மோ. ஐஸ்வர்யா

முதுகலைத்தமிழ், முதலாமாண்டு

## சொல்விளையாட்டு விடைகள்

1. தப்பு 2. உடுக்கை 3. சங்கு 4. பம்பை 5. தவில் 6. தாரை 7. ஒத்து 8. கொம்பு 9. உருமி 10. பறை

# அறிவியல் செய்திகள்

- ☞சர் ஐசக் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டறியும் போது அவருக்கு வயது 22.
- ☞ஒவ்வொரு வருடமும் ஈபில் கோபுரமானது கோடை காலத்தில் 15 சென்டிமீட்டர் உயரம் வளரும்.
- ☞ஒவ்வொரு வருடமும் ஆஸ்திரேலியா கண்டமானது வடக்கு நோக்கி வேகமாக ஏழு சென்டிமீட்டர் நகர்ந்து வருகிறது.
- ☞நமது உடலில் இருக்கும் டி.என்.ஏ., தற்போது இருக்கும் சூப்பர் கம்ப்யூட்டர்களின் சக்தியைவிட பல மடங்கு மெமரியைக் கொண்டுள்ளது.
- ☞இந்த உலகமே அழிந்தாலும் டார்டிகிரேட் என்ற மிகச் சிறிய உயிரினம் அழியாது.
- ☞நம் உடலில் இருக்கக்கூடிய இரத்தச் சிவப்பணுக்கள் நமது உடலை முழுவதுமாகச் சுற்றிவர, இருபது நொடிகள் மட்டுமே எடுத்துக்கொள்ளும்.
- ☞ஒரு தேனியால் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியைத் தாண்டியும் பறக்க முடியும்.
- ☞நெப்டியூன் யுரேனஸ் ஜுபிடர் மற்றும் சனி ஆகிய கிரகங்களில் உள்ள வளி மண்டலங்கள் கார்பன் அணுக்கள் கொண்டிருப்பதால் அங்கு வைர மழை பொழிகிறது.
- ☞சூரியனில் வெடிப்பு ஏற்படும் போது கிளம்பும் வெப்ப ஆற்றலைச் சோலார் ஃபிளேர் என்பார்கள்.

சு. அருணிமா தேவி
இளங்கலைத்தமிழ், மூன்றாம் ஆண்டு

# சித்தர்கள் உருவாக்கிய ஆரோக்கிய மருத்துவம்

உணவே மருந்து

சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவம் ஆகும். தமிழனுக்கே உரிய தனித்துவமான தொன்மையான மருத்துவ முறை சித்த மருத்துவம் ஆகும். திருமூலர் தனது "அண்டத்தில் உள்ளதே பிண்டம், பிண்டத்தில் உள்ளதே அண்டம்" என்று கூறுகிறார்.



நமது உடலில் உள்ளது எல்லாம் உலகில் எந்த வடிவில் நிறத்தில் இருக்கிறதோ அதனைக் கொண்டு உடலில் உள்ள உறுப்புகளுக்கு மருந்துகளைக் கண்டறிந்தனர். உதாரணமாக அரச இலை, வெற்றிலை போன்றவற்றை இதயத்திற்கும், நுரையீரல் வடிவில் உள்ள தூதுவளை இலையைச் சுவாசக் கோளாறுகளுக்கும் பயன்படுத்தினர்.

இது உண்மையான தவநெறி பிறழாது உன்னத நிலையில் வாழ்ந்து வந்த சித்தர்கள், தங்கள் அருள், ஞான அறிவின் பயனால் மிகத்துல்லியமாக உருவாக்கியுள்ள மருத்துவ முறையாகும்.

இம்மருத்துவம் ஒவ்வொரு இடத்திலும் உள்ள தட்ப வெட்ப நிலைகளுக்கேற்ப பல்வேறு வகையான இயற்கைப் பொருட்களைக் கொண்டு பிணிகளை நீக்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல், பூண்டுகள், செடி கொடிகள், பட்டைகள், இலைகள், பூக்கள், பிஞ்சுகள், காய்கள், பழங்கள், வித்துகள், பிசின்கள், வேர்கள் ஆகியவற்றைக் கொண்டு மருந்துப் பொருட்கள் பல்வேறு நோய்களுக்கு ஏற்றவாறு தயாரிக்கும் ஓர் ஒப்பற்ற மருத்துவ முறையே சித்த மருத்துவமாகும். தாவரங்கள், உயிரினங்கள், உலோகங்கள் அதாவது பஞ்ச பூதங்கள் அனைத்தும் மனித நலன்களுக்காகப் பயன்படும் ஆற்றல் உடையவை என்பதே சித்த மருத்துவத்தின் கோட்பாடாகும். உணவே மருந்து, மருந்தே உணவு என்பது சித்தர்கள் வாக்கு. பசியாற்றும் உணவே உயிர் காக்கும் மருந்தாகவும் செயல்படுகிறது. நோய்வரின் நோய்நாடி அது தணிக்க வாய்நாடிச் செய்வது சித்த மருத்துவத்தின் சிறப்பாகும்.

காலம் என்னும் கடும்பகை கடந்த பின் மருந்து மாத்திரைகள் எதற்கு என்பது வழக்கு. இந்தச் சூழ்நிலை உருவாகும் கட்டத்தில்தான் சித்தர்கள், செந்தூரப் பஸ்பங்கள், கசாயங்களைப் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம்

தருவதைவிட்டு வர்மக் கலையைப் பயன்படுத்தினர். இந்த வர்மக்கலைதான் சித்தர்களை மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுப்பட்டவர்களாக மிகுந்த சக்தி பெற்றவர்களாக ஆக்குகிறது. யோக நிலை, ஞான நிலை, சவநிலை ஆகிய மூன்றும் இணைந்த நிலையில் செயல்பட்டவர்கள் சித்த மருத்துவர்கள்.

இன்றைய காலகட்டத்தில் உண்ணும் உணவு ஆரோக்கியமானதாக இருக்குமாறு பார்த்துக்கொள்வது அவசியமாகிறது. நம் முன்னோர்கள் அறிவுறுத்திய வழியில் ஆராக்கியமான உணவு முறையைப் பின்பற்றி, உணவு முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

இ. விஜயலட்சுமி, இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு

# விடுகதைகள்

1. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ என்ன பூ?
2. சட்டையைக் கழற்றினால் சத்துணவு. அது என்ன?
3. வயதானால் கிடைக்கும் இன்னொரு கை எது?
4. சீவ சீவ குறைந்துக் கொண்டே போவான். அவன் யார்?
5. முதலில் காற்றைக் குடிப்பான் பின்னர் காற்றிலே பறப்பான். அவன் யார்?
6. படபட ஆசாமி மனதுக்குள் இடம் பிடிப்பான். அவன் யார்?
7. கடலில் கலக்காத நீர் யாரும் குடிக்காத நீர். அது என்ன?
8. ஓர் அரண்மனையில் 32 காவலர்கள். அது என்ன?
9. பகலெல்லாம் பெருங்காடு இரவெல்லாம் பூக்காடு. அது என்ன?
10. வெயிலில் மலரும் காற்றில் உலரும். அது என்ன?

**ச. வினிதா, இளங்கலைத் தமிழ், முதலாமாண்டு**

# பண்டிகை வரலாறு

## விநாயகர் சதுர்த்தி



ஓவியம் – அ. லதா, இளமறிவியல் கணினிப்பயன்பாட்டியல், மூன்றாமாண்டு

நாம் எந்த ஒரு நல்ல செயலைத் தொடங்குவதற்கு முன்பு பிள்ளையாரை வணங்குகிறோம். இந்த விநாயகர் வழிபாடு இந்தியாவிலும் நேபாளத்திலும் காணப்படுகிறது. இவருக்குக் கணபதி, ஆனைமுகன் என வேறு பல பெயர்கள் உண்டு. அனைவருக்கும் விநாயகர் மிகவும் பிடித்த கடவுள்.

விநாயகர் சதுர்த்தி கோலாகலமாகக் கொண்டாட காரணமாக இருந்தவர் மராட்டிய மன்னன் சத்திரபதி சிவாஜி. இவ்விழா தேசிய விழாவாகவும் கலாச்சார விழாவாகவும் கொண்டாடப்பட்டது. அதன் பின்னர் சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்து மதத்தில் ஈர்ப்புக் கொண்ட பாலகங்காதர திலகர் இதனை ஊர்வலமாகக் கொண்டாட மக்களை ஊக்குவித்தார். சர்வஜன கணேஷ் உத்தவ் என்ற பெயரில் 1983ஆம் ஆண்டு முதல் இன்று வரை பெருவிழாவாக விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட்டு வருகிறது.

பிடித்து வைத்தால் பிள்ளையார் என்பது ஆன்றோர் வாக்கு. சந்தனம், சாணம், மஞ்சள் இவற்றில் ஏதோ ஒன்றைத் தூய மனதுடன்

பிடித்து வைத்து, குங்குமம் சாந்திட்டு வணங்கினால் பிள்ளையார் அருள் புரிவார். இதனாலேயே விநாயகர் சதுர்த்தி அன்று, வீடுகளில் களிமண்ணாலான புதிய விநாயகர் சிலைகளை வாங்கி வழிபடுவது வழக்கமாக உள்ளது.

மோதகம், கொழுக்கட்டை, பால், தயிர், தேன், அவல், பொறி, கடலை, சர்க்கரை, பேரிட்சை, தேங்காய், விளாம்பழம், வாழைப்பழம், கொய்யாப்பழம், மாதுளை, இலட்டு, சுண்டல் ஆகியவை விநாயகர் விரும்பும் சிறந்த படையல் பொருட்கள் ஆகும்.

## விநாயகர் சதுர்த்தி உருவான கதை

கஜமுகாசுரன் தனது தவத்தின் பயனாகச் சிவபெருமானிடமிருந்து வரம் பெற்றார். "எந்த ஆயுதத்தாலும் தனக்கு மரணம் நேரிடக்கூடாது" என்பதே அந்த வரம். வரம் பெற்ற அசுரன் மதங்கபுரம் எனும் நகரத்தை உருவாக்கி அரசனாக ஆட்சி செய்தான்.

கஜமுகாசுரன் வரத்தின் வல்லமையால் தலைகணம் கொண்டு தேவர்களையும் முனிவர்களையும் கொடுமைப்படுத்தினான். தேவர்கள் அனைவரும் தம் முன்னால் நின்று தினமும் தோப்புக்கரணம் போடவேண்டும் என்று கட்டளையிட்டான். அரக்கனின் கொடுமைகளைப் பொறுக்க முடியாத தேவர்கள் பிள்ளையாரை வணங்கி தம்மைக் காக்குமாறு வேண்டினார்கள்.

விநாயகருக்கும் அசுரனுக்கும் கடும் போர் மூண்டது. விநாயகர் தமது அம்புகளால் கஜமுகாசுரனின் படைகளையும் தேர் மற்றும்

ஆயுதங்களையும் நொடியில் அழித்தார். ஆனால் அவரது ஆயுதங்களினால் அந்த அரக்கனைக் கொல்ல முடியவில்லை. எந்த ஆயுதத்தாலும் அசுரனை அழிக்க முடியவில்லையே என்று விநாயகர் சிந்தித்த போது சிவபெருமான் தனது மகனுக்காகக் குரல் கொடுத்தார். மகனே கஜமுகாசுரனை எந்த ஆயுதத்தாலும் கொல்ல முடியாது என்று சொல்லவே சற்றும் யோசிக்காமல் தனது வலது தந்தத்தை ஒடித்து கஜமுகாசுரனை வதம் செய்தார். பின்னர் கஜமுகாசுரனை மூஞ்சுறாக மாற்றி, தனது வாகனமாக வைத்துக்கொண்டார் எனப் புராணங்கள் கூறுகின்றன.

இப்படி கஜமுகாசுரனை, சூரசம்ஹாரம் செய்ததாலும் ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி நாளில் விநாயகர் பிறந்ததாலும் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது.

அன்றைய நாளில் வீடுகளை மாவிலை தோரணங்களால் அலங்கரித்து, பெரிய விநாயகர் உருவச்சிலைகளை வாங்கி அலங்காரம் செய்து, விநாயகருக்குப் பிடித்தமானதைப் படையலிட்டு விநாயகர் சதுர்த்தியை அனைவரும் கொண்டாடுகின்றனர்.

புராணங்களில் இருந்து தோன்றினாலும், ஒவ்வொரு பகுதிகளிலும் வெவ்வேறு விதமாகக் கொண்டாடப்பட்டாலும், பண்டிகை கொண்டாட்டங்கள் உறவுகளை ஒன்று சேர்க்கும் கருவியாகவே அமைகிறது. ஒன்றிணைந்து கொண்டாடுவோம்.

தே.ஜனனி, இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு

# திருவோணம் பண்டிகை

கேரள மக்களின் பாரம்பரிய விழாவான திருவோணப் பண்டிகை ஆண்டுதோறும் ஆவணி மாதம் ஹஸ்த்தம் நட்சத்திரத்தில் இருந்து திருவோணம் நட்சத்திரம் வரை 10 நாட்கள் நடைபெறும். மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவோணத்தன்று மக்களைத் தேடி வரும் மகாபலி சக்கரவர்த்தியை வரவேற்க, கேரள மக்கள் தங்கள் வீட்டு வாசல்களில் அத்தப்பூ கோலம் போட்டு புத்தாடைகள் அணிந்து இனிப்புகள் பரிமாறி கொண்டு மகிழ்வுடன் இணைந்திருபார்கள்.

## ஓணம் பண்டிகையின் வரலாறு

முன்னொரு காலத்தில் ஒரு சிவாலயத்தில் விளக்கானது அணையக் கூடிய தருவாயில் இருந்தபோது, ஓர் எலியானது அந்த விளக்கின் திரியைத் தூண்டியதால், அந்த விளக்கு பிரகாசமாக எரிந்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்த



சிவபெருமான், அந்த எலிக்கு மறு பிறப்பில் மூன்று உலகத்தையும் ஆட்சி செய்யும் அதிகாரத்தை வழங்கினார். அந்த எலி மறு பிறவியில் மன்னனாகப் பிறந்து மகாபலி என்ற பெயருடன் மூவுலகையும் சிறப்பாக ஆட்சிபுரிந்து வந்தது. இதனைப்

பொறுக்காத முப்பத்து முக்கோடி தேவர்கள் மகாபலி சக்கரவர்த்தியை அடக்கி தங்களின் வலிமைக்குக் கொண்டு வர எண்ணி திருமாலிடம் உதவி கேட்டனர்.

திருமால் வாமன அவதாரம் எடுத்து மூன்றடி மண்ணை மகாபலி மன்னனிடம் தானமாகக் கேட்டு, பெரிய உருவம் எடுத்து, வானத்தை ஓர் அடியாகவும் பூமியை மற்றொரு அடியாகவும் கடைசி அடியை மகாபலியின் தலைமீதும் வைத்தார். இதனால் பாதாளத்தில் விழுந்த மகாபலிசக்கரவர்த்தி தன் நாட்டையும் மக்களையும் ஆண்டுக்கு ஒரு முறை வந்து பார்க்க வரம் வேண்டினார். திருமாலும் அவரை ஆட்கொண்டு அவர் கேட்ட வரத்தை வழங்கினார். இவ்வாறு மகாபலி சக்கரவர்த்தி இந்த நன்னாளில், தான் ஆண்ட நாட்டிற்கு வருவதாகவும் அவனை வரவேற்கும் விதமாக இவ்வோணம் கொண்டாடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## ஓணத் திருநாளின் சிறப்பு

இந்தியாவின் தென் தமிழகம் மற்றும் கேரளவில் கொண்டாடப்படும் ஓணம் பண்டிகை, அத்தப்பூ பூக்கோலத்தோடு தொடங்கும். முதல் நாளிலிருந்து பத்தாம் நாள் வரை பலவகை பூக்களால் அழகு பெறும் இக்கோலத்தில் தும்பை, காசி, அரிப்பூ, சங்குப்பூ போன்ற பூக்கள் முதலிடம் பெறும்.

கோலத்திற்கு அடுத்து உணவு வகைகளில், ஆறு சுவைகளில் கசப்புச் சுவையைத் தவிர்த்து, 64 வகையான ஓண சாத்யா என்ற உணவு தயாரிக்கப்படுகிறது. அடுத்து கசவு எனப்படும் தூய வெண்ணிற ஆடை அணிந்து பெண்கள் மகிழ்ச்சி பொங்க ஆடும் கைக் கொட்டுக்களி.



திருநாளின் நான்காம் நாள் புலிக்களி அல்லது கடுவக்களி என்ற நடனங்களும் ஆடப்படுகின்றன.

இவ்விழாவில் இடம் பெறும் மற்றொரு சிறப்பான நிகழ்வு யானைத் திருவிழாவாகும். இதில் யானைகளை விலையுயர்ந்த மணிகள் தோரணங்களால் அலங்கரித்து ஊர்வலம் நடத்துவர்.



பண்பாட்டு அடையாளங்களான பாரம்பரிய விளையாட்டுகளான கயிறு இழுத்தல், கலரி படகு போட்டிகள் போன்ற போட்டிகள் திருவிழாவின் பத்து நாட்களும் நடத்தப்படுகின்றன. இதுபோன்ற திருவிழாக்களைச் சாதி, மதம், இனம் கடந்து கொண்டாடி மகிழ்வோம்.

ரா. பிரியதர்ஷினி, இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு

## பொன்மொழிகள்

- கவலைகளின் அளவு கையளவாக இருக்கும் வரைதான் கண்ணீருக்கும் வேலை. அது மலையளவு ஆகும்போது மனமும் மரத்துப் போகும். - கவிஞர் கண்ணதாசன்.
- நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை, நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும், உன் உழைப்பால் நீ எண்ணியது உன்னை வந்து சேரும். நீ நீயாக இரு. - ஏ.பி.ஜே.அப்துல் கலாம்.
- புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன். எதிர்கால வாழ்விலும் இறந்தவன். - யூரிபிடிஸ்.
- சுறுசுறுப்பாய் இருப்பீர்களானால் எல்லாம் சுலபமே. சோம்பல் கொண்டவர்களுக்கு எதுவும் எளிதல்ல. - விவேகானந்தர்.

**மோ. தீபா**
**இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு**

---

## கடித இலக்கியம்

அன்புள்ள தோழிக்கு,

நான் நலம், நீயும் உன் குடும்பத்தில் உள்ள அனைவரும் நலமா? உன்னுடைய இந்த இருபதாவது பிறந்த நாளில் நான் உன்னுடன் இல்லை என்ற வருத்தத்துடன் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

பதினாறு ஆண்டுகளாக நம் நட்பு செழித்து வளர்கிறது. நேற்று தான், நாம் ஊரில் ஒன்றாக விளையாடி மகிழ்ந்த நினைவுகளை அசைபோட்டுக் கொண்டிருந்தேன். நாம் பள்ளிக்கூடம் முடிந்தவுடன்

இலந்தைப் பழம் பறிக்கச் செல்வோம். அப்போது அங்குள்ள பொன் வண்டுகளைப் பிடித்து நம் தோழிகளுடன் காட்டி மகிழ்ந்த அனுபவங்கள் இன்னும் என் மனதில் நிற்கின்றது.

காலாண்டு விடுமுறையில் வாய்க்காலில் மீன்களைப் பிடித்து ஒன்றாகச் சுட்டுச் சாப்பிட்டது, அதிகாலையில் தோட்டத்தில் பூப்பறிக்க சென்றது, பள்ளிக்கூடத்தில் உள்ள நாவல் பழ மரத்தில் நாவல் பழம் பறித்து அதில் உப்பு காரம் தூவி சாப்பிட்டது, நம் ஊர் எல்லையில் உள்ள எல்லையம்மன் கோவில், ஆற்றோர ஆலமரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடியது என்று அங்கு வாழ்ந்த ஒவ்வொரு நிமிடமும் சொர்க்கத்தில் இருந்தது போல் இருந்தது.

ஒருமுறை நம் ஊர் திருவிழாவில் நடந்த நாடகத்தின் போது கயிறைப் பாம்பு என்று தவறாக நினைத்து நீ அலறியதால் அங்கு ஒரு கலவரமே ஏற்பட்டது. அதை இப்போது நினைத்தாலும் சிரிப்பாக வருகிறது. உன்னையும் நம் ஊரின் மண்வாசத்தையும் மிகவும் இழக்கிறேன்.

உன்னுடைய இந்தப் பிறந்த நாளில் உனக்கு அனைத்து நன்மைகளும் நடக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன். மேலும், பலவற்றை உன்னுடன் பேச ஆவலாக உள்ளேன். உன்னை நேரில் சந்திக்கும் போது, எல்லாவற்றையும் மனமாற பேசி மகிழுவோம். உன் பதில் மடலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

ரா. பிரியதர்ஷினி
இளங்கலைத் தமிழ், மூன்றாம் ஆண்டு

சிறுகதை

# காலம் கடத்தாதே

யாகினி அரசு பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி. இவள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள்.

இருப்பினும் யாகினி தன் குடும்ப சூழ்நிலை பற்றியெல்லாம் யோசிக்காமல் விளையாட்டிற்காகவும் பொழுதுபோக்கிற்காகவுமே நேரம் செலவழித்துக் கல்வியைக் காற்றில் பறக்கவிட்டாள்.

சக தோழிகள் அறிவுரை சொன்னாலும் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

இவ்வாறு நேரத்தை வீணடித்து சோம்பேறியாக இருக்கும் யாகினி, தான் வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்று அவ்வப்போது கனவுகள் காண்பாள். வெறும் கனவு மட்டுமே காண்பாளே ஒழிய அதற்காக எந்த முயற்சியும் எடுக்க மாட்டாள்.

இதேபோல் நாட்கள் கடந்தது பத்தாம் வகுப்பிற்குச் சென்றாள்.

அப்போதும் அவள் அதே நினைவில்தான் இருந்தாள். இதனால் தேர்வு முடிவு அவளுக்குத் தோல்வியே கிட்டியது. இந்த நிலையில் மீண்டும் பள்ளிக்கு அனுப்ப அவரது பெற்றோர் முன்வரவில்லை. சிறிது காலம் கூலி வேலைக்குச் சென்றாள்.

பின் பெற்றோரின் கட்டாயத்தால் திருமணம் செய்து கொண்டாள்.

திருமணத்திற்குப் பின் தன் தோழிகளை யாகினி சந்தித்தாள். அப்போது அவர்கள் உயர் பதவிகளில் நல்ல நிலைமையில் இருப்பதாகக் கூறினார்கள்.

இச்சூழலில் நாகினி தன் நிலையை எண்ணி வருந்தி அங்கிருந்து விடை பெற்று வந்தாள்.

இதைப் பற்றித் தன் கணவனிடம் கூறி, தான் மீண்டும் படிக்க விரும்புவதாகக் கூறினாள். ஆனால் அதற்குக் கணவன் ஒப்புக்கொள்ளவில்லை.

இவ்வாறு கணவன் ஒப்புக் கொள்ளாத நிலையில் “நேரத்தை வீணாக்கி என் வாழ்க்கையே வீணாக்கிக் கொண்டேனே” என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டாள் யாகினி.

நேரத்தை வீணாக்காமல் படித்திருந்தால் இச்சமுதாயத்தில் சொந்தக் காலில் நானும் தைரியமாக நின்றிருப்பேனே என்று தனி அறையில் அழுது புலம்பினாள்.

யாகினியின் வாயிலாக, காலமே நம்மைக் கடத்த வேண்டும். நாம் காலத்தைக் கடத்தக் கூடாது என்ற கருத்து புலனாகிறது.

பா. லோகேஸ்வரி
இளங்கலைத் தமிழ்,
மூன்றாமாண்டு

# சொல் விளையாட்டு

**நாட்டுப்புற இசைக்கருவிகளைக் கட்டத்தில் கண்டறிக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| த | வீ | ணை | ப | கொ | த | வ | ச |
| வி | ப் | கி | ம் | ரை | தா | ங் | கு |
| ல் | கு | பு | ட் | க | கு | ம் | க் |
| ம் | ங் | ரு | வி | டா | தா | மி | ப |
| ப | து | உ | கை | ப | றை | ரு | ட் |
| மி | டி | க் | த | து | பை | த | ட |
| ரு | டு | கை | த் | த | ய | ம் | ம் |
| உ | ரு | ஒ | நா | த | சு | வ | ப |

## கவிதைகள்

கவிதைகள்

### *வெளிநாட்டுத் தந்தை*

எனக்குத் தாலாட்டுப் பாடியதில்லை
இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்
எனக்குப் பாடம் சொல்லி கொடுக்கவில்லை
இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்
என்னை வெளியில் அழைத்து சுற்றியதில்லை
இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்
என்னைக் கொஞ்சிய நாட்கள் அதிகமில்லை
இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்
இத்தனைச் சந்தோசத்தையும் எனக்குக் கொடுக்க நினைத்து
கொடுக்க முடியாமல் வெளிநாட்டில்
எங்களுக்காக உழைக்கும் தந்தை!

செ. பவித்ரா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

## *முன் சென்றிடு நண்பா!*

மரத்திற்குச் சருகு தோல்வியா?
பசுமை கொஞ்சும் இளந்தளிர் பிறந்திடுமே.....
இளந்தளிர் அதற்கு வெற்றியே!
முகிலிற்குக் கருமை தோல்வியா?
அகிலம் சிறந்திட மழையைப் பொழிந்திடுமே...
மழை அதற்கு வெற்றியே!!
வானிற்கு இருள் தோல்வியா?
கண் கவரும் சந்திரனும் அவனுடைய
தோழியராம் விண்மீனும் வெற்றியே!
சந்திரனுக்குக் கலங்கம் தோல்வியா?
கலங்கினாலும் நிலவின் அளவு குறைந்திடுமா?
கலங்கமும் அதற்கு வெற்றியே!
பேனாவில் மைதீர்தல் தோல்வியா?
மௌனத்தின் ஆழத்தை வரைந்து தீர்க்கும்
கவிதை அதற்கு வெற்றியே!
தோல்வி பல கண்டாலும் இறுதியில் வெற்றி
இன்பத்தை அனுபவிக்கச் செய்யும்
தோல்வியும் நமக்கு வெற்றியே...!
தோல்வியென வருந்தி தலைகுனிதல் அழகா நண்பா?
தோல்வியென வருந்தி
உயிரை இழத்தல் அழகா நண்பா?
வாடுமே என எண்ணி

முட்கள் பூக்களைப் பாதுகாக்காமல் ஓய்வு எடுக்குமா?
பயம் அதைக் கொள்வோம்!!
பயம் அதை வெல்வோம்!!
தோல்வியை ஏற்போம்!
தோல்வி அதை வெல்வோம்!
முன் சென்றிடு நண்பா!
வெற்றி உனதே!!

சா. யோகேஸ்வரி, முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு

## அக்கா

ஒரே கருவறையில் நீயும் நானும் ஒன்றாகப் பத்து மாதம்...
அம்மாவிற்குத் துன்பம் அளித்தோமா தெரியவில்லை...
ஒரு சில வினாடிக்கு முன் நீ பூமிக்கு வந்தாய்...
என்ன மாயமோ தெரியவில்லை...
உன்னை அம்மா என்றழைப்பதே மகிழ்ச்சியளிக்கிறது...
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
நீயே அம்மாவிற்கு இணையானவள்...
தாயாகக் காத்தவளே...
தந்தையாக அணைத்தவளே...
அனைத்தையும் ஒன்றாகப் பார்ப்பது - என்
அக்காவின் இடத்திலே...
பாசத்தில் அம்மாவை மிஞ்சியவளே.... என் அன்பான அக்கா...!!!
உன் அன்புக்காக எப்பொழுதும் ஏங்கி இருக்கும் உன் தங்கை...

**ஆ. நிர்மலா, இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு**

## *மழை*

விண்ணோடு விண்ணாக மத்தளம் முழங்க
செவிகள் மட்டுமல்லாமல் வானுலகில் இடி அதிர
ஆளை மயக்கும் மண் வாசமோடு
இதமான தென்றல் மனம் வருடி செல்ல
ஓரிரு மழைத்துளிகள் என் தேகத்தைத் தொட
அண்ணாந்து விண்ணைப் பார்க்க
மேகக் கூட்டங்களின் ஒளியுடன் - வானும்
சற்று வியப்பாகத் தான் இருந்தது
இயற்கையின் அழகைப் பார்த்து
நான் செல்லம் கொஞ்ச அழைக்க
நீ என்னைக் கொஞ்சி விளையாட
என்னுள் வந்த ஒளியும் அழகே!
தாய் அணைப்பது போல் ...
உன்னுள் நனைந்து விளையாடி
கவலைகளை மறந்து குழந்தை போலானேன்
விளையாடிய மகிழ்வில் மனம் செழிப்பானது
சற்றும் தயங்காமல் வந்து கொண்டே இரு
என் மனதைப் போலவே
இவ்வுலகையும் செழிப்பாக்க வா மழையே வா..!!!!

**ர. மகாலட்சுமி, இளங்கலைத் தமிழ், இரண்டாம் ஆண்டு**

## கண்ணீர் மழை

ஓர் அழகான கிராமத்தில் அடை மழை
என் இதயத்தில் கோடை மழை
வானத்தில் இடி மின்னல்
என் மனதிற்குள் மின்சார மின்னல்
வானத்தில் அடை மழை
என் இரு கண்களிலும் கனமழை
மலையில் நீர் வீழ்ச்சி
மனதிற்குள் வெள்ள வீழ்ச்சி

**பா. ஜெயலட்சுமி, இளங்கலைத் தமிழ், இரண்டாம் ஆண்டு**

## மழை

மண்ணுக்கு உயிர் தந்தாய்
மண்உயிர் வாழ நீர் தந்தாய்
உலகிற்கு உயிர் நீயே
உன் அழுகை உலக உயிர்களின் புன்னகை
பசுமையுடன் பூத்துக் குலுங்கச் செய்த நீ
இப்பொழுது எங்கே போனாய்
முன்பு மாரி மும்மாதம் பெய்தாய்
இன்று ஒரு மாதமாவது பொழிவாயாகக்
காரணம் நாங்களே!
எங்களை மன்னித்து அருள்வாய் மழையே!
உன் கருணை மழை பொழிவாயே!

**மா. ஜெகதீஸ்வரி, முதுகலைத் தமிழ், முதலாம் ஆண்டு**

## இராணுவ வீரர்கள்

நாட்டைக் காக்க வீட்டைப் பிரிந்து வாழும் வீரர்களே!
எங்கள் மகிழ்விற்கு உயிர் மாய்த்த தியாகிகளே!
எங்கள் நிம்மதியான உறக்கத்திற்கு
எல்லையில் உறங்காமல் காவல் நிற்கும் காவலர்களே!
நாட்டைக் காக்க கையில் ஏந்திய துப்பாக்கியில் தோட்டாக்கள்
உங்கள் உயிரையும் மாய்த்து விடும்
என்ற செய்தி தெரிந்தும் கையில் ஏந்தி
எல்லை நிற்கும் போர் வீரர்களே!
அடுத்த ஜென்மத்தில் நீங்கள் இருக்க வேண்டும்
ஒரு துப்பாக்கியாக...
அதை நான் கையில் ஏந்தி நாட்டுக்காகப் போரிட....
எங்கள் தலைமுறை செழிப்புடன் வாழ
உங்கள் வாரிசையும் இழக்கத் துணியும் வீரர்களே!
எங்கள் சுதந்திரமான வாழ்விற்குக் காரணம்
எல்லையில் வழியும் உங்கள் குருதியே!
தாயின் கருவறையில் கூட காத்திருக்க முடியாமல்
நாட்டைக் காக்க வெளிவந்த எனது அன்பு
சகோதரர்களே!
உங்கள் தியாகத்திற்கு என்றும்
தலைவணங்குவேன் ஒரு சகோதரியாக....!!!

**பா. லோகேஸ்வரி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

## புவியாளும் தமிழ்மொழி

மண்ணோடு உண்டான முன் மொழியாம்
புவியறிந்த வளங்கள் கொண்ட செம்மொழியாம்
ஈகை உணர்த்திடும் நல் மொழியாம்
தொகைக்குள் அடங்கா தொன் மொழியாம்
கவிஞனின் அணுகலந்த கவி மொழியாம்
வேரூன்றி நின்றிடும் தனி மொழியாம்
பழமொழி பேசிடும் பண் மொழியாம்
தாகம் தகர்த்திடும் உயிர் மொழியாம்
இரௌத்திரத்தில் கண்ணகி ஏவிய மொழியாம்
அக்னி சுவாலைப் போல் எரித்திடும் மொழியாம்
மழைக்குப்பின் வானவில் போல் பல்வண்ண மொழியாம்
வந்தாரை வரவேற்கும் பேரன்பின் மொழியாம்
உவகையைப் பாய்ச்சிடும் நல்ல தென் மொழியாம்
தாலாட்டச் சுரம் தரும் இன் இசை மொழியாம்
தேன் அமுதம் சுரந்திடும் மதுரத்தின் மொழியாம்
மழலை வாய் சிந்தும் பழமுதிர் மொழியாம்
வான் புகழ் வள்ளுவன் வணங்கும் திரு மொழியாம்
இளமை ததும்பிடும் எளிய புது மொழியாம்
புன்னகை சிந்திடும் தெளிந்த எழில் மொழியாம்
கருவிலே நான் கேட்ட முதன் முதல் மொழியாம்
எட்டுத்திக்கும் புகழ் மணக்கும் தாய்த்தமிழ் மொழியாம்
பூலோகக்காலம் வரை புவியாள்வாய் தமிழ் மொழியே!!!

**கை. மேரி பெர்னத், உயிர் வேதியியல், இரண்டாமாண்டு**

## *நான் கண்ட தெய்வம் என் அம்மா*

என் உதயத்தின் காரணம் நீ!
என்னைப் பத்து மாதம் வயிற்றில் சுமந்து
என் ஆயுள் முழுவதும் மனதில் சுமப்பவள்
வைத்தியம் எனக்கென்றால் பைத்தியம் உனக்கல்லவா?
துன்பத்தை உன் பங்கிற்கும் இன்பத்தை
என் பங்கிற்கும் பாகம் பிரித்தவளே.
ஆயிரம் தெய்வங்கள் வந்தாலும் உங்களைப்போல்
ஒரு தெய்வத்தை நான் கண்டதில்லை.

**ர. கிருத்திகா தேவி, இளமறிவியல் கணினியியல், முதலாமாண்டு**

## அம்மா

நான் எழுதிய முதல் கவிதை அம்மா!
நான் அழுதபோது என்னைச் சிரிக்க வைத்த முகம்....
என்றுமே என்னை வெறுக்காமல் மன்னிக்கும் மனம்....
அளவுகளே இல்லாத பாசம் நேசம்
அனைத்தையும் உன்னிடம் கண்டேன் அம்மா....!
அழுவதற்குக் கண்கள்....
அணைப்பதற்குக் கைகள்....
சாய்ந்து கொள்ள தாயின் மடி போதும்
எனக்கு உயிர் தந்த அன்னை என் உயிர் உள்ளவரை
மறவேனோ.....!

**ம. லட்சுமி பிரியா, இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு**

## *அம்மா தெய்வம்*

பூனை போல தங்கை பாப்பா
சுற்றிச் சுற்றி வந்தாள்!
புரியவில்லை எதையோ தேடி
அழுதே அவளும் நின்றாள்!
தட்டில் அம்மா உணவைக் கொண்டு
தங்கை அருகில் வந்தாள்!
தொட்டுத் தூக்கிப் பாப்பாவுக்குச்
சோறு ஊட்டி விட்டாள்!
ஓடி ஆடி தங்கை பாப்பா
ஒளிந்த போதும் கூட ஓடிப்பிடித்து
அவளைத் தூக்கி ஊட்டி ஊட்டி விட்டாள்!
பாவை தங்கை வாயில் சிரிப்பைப்
பார்த்துப் பார்த்து மகிழ்ந்தேன்!
தேவை அறிந்தே எதையும் செய்யும்
தெய்வம் அம்மா என்பேன்…!

**கா. சுவாதி, இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு**

## *இயற்கை*

இலைகள் படப்படக்கும் இசைக் கேட்டேன்
இமைகள் படப்படக்க நின்றேன்!
பூக்களைத் தேடிவரும் வண்டுகளைக் கண்டேன்
புன்சிரிப்பு தோன்ற நின்றேன்!
வண்ணக்கிளிகள் பேசுதம்மா வர்ணிக்க

வார்த்தைகள் இல்லையம்மா !
சோலைக்குயில்கள் பாடுதம்மா
சொல்குற்றம் அங்கே இல்லையம்மா !
பாசப்பறவைகள் எல்லாம் பறக்குதம்மா
பாவிகள் அங்கே இல்லையம்மா !
காற்றின் சீற்றத்தைப் பார்த்தேன்
கடலின் அலைகளைக் கண்டேன் !
வாட்டத்தோடு இருந்த எனக்கு
வசந்தம் தோன்றியதம்மா !
தென்னங்கீற்றின் அழகில் தென்றல் காற்று வீசுதே !
நெல்மரத்தின் நிழலில் குருவிகள் ஓய்வெடுக்கிறதே !
புன்னைமர நிழலில் பூக்கள் கோலம் போடுதே !
மலையின் ஆட்சி நடக்குதம்மா !
மழையும் பொழிந்து மகிழுதம்மா !
இறைவன் படைத்த இயற்கையிலே
ஏற்றத்தாழ்வு இல்லையம்மா….!

**ஈ. ஹரிணி, இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு**

## தாய் மொழி

அறிவைத் தந்த மொழி
அழகை ரசிக்க வைத்து
ஆணவத்தை அடிப் பணிய
செய்த அன்பின் ஆயுதமாம்
எம் தமிழ்மொழி…..
நட்புக்குள் வலம் வரும்

எளிமையான மொழி
உயர்வு தாழ்வின்றி
பேதமில்லா பெருமொழி....
ஏட்டிலே கற்க ஏதுவான
பழகுதற்கு இலகுவான மொழி
நான் பற்றுக் கொண்டு
காதலிக்கும் செம்மொழி
தமிழ் மொழி.....

**அ. பவித்ரா, இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு**

## *தோழி*

என்னுடன் அதிக நேரம் இருந்தால்
என் சிந்தனையைத் தூண்டியவள்
எனக்குத் தைரியம் சொன்னால்
என்னுடன் அன்பாகப் பழகியவள்
என்னுடன் மணல் வீடு கட்டியவள்
என் படிப்புக்கு உதவியவள்
என் அறிவைத் தட்டிக் கொடுத்தவள்
என்னை முழுவதுமாகப் புரிந்துக் கொண்டவள்
என் வளர்ச்சிக்கு உதவியவள்
இன்று என்னுடன் இல்லை ....
மனம் ஏற்க மறுக்கிறது
அவள் இறந்துவிட்டாள்....
அவளின் நினைவுகளோடு நான் வாழ்வேன்......!

**செ. ரூபிகா, இளங்கலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு**

# தகவல் களஞ்சியம்

- ஒரு நீலத் திமிங்கலத்தின் நாக்கானது ஒரு யானையின் எடையை விட அதிகமாக இருக்கும். அதாவது நீலத் திமிங்கலத்தின் நாக்கின் எடை 2 ஆயிரம் முதல் 4 ஆயிரம் வரை இருக்கும்.
- சராசரியாக ஒரு மேகத்தின் எடை 1.1 மில்லியன் பவுண்டுகள் ஆகும்.
- ஸ்வீடன் என்ற நாட்டிலே அதிக அளவிலான தீவுகள் உள்ளன. எண்ணிக்கை - 2,25,800.
- நாம் இறக்கும் வரை வளரக்கூடிய உடல் பாகம் காதுகள்.
- டால்ஃபின் ஒரு கண்ணைத் திறந்து கொண்டு மற்றொரு கண்ணை மூடிக்கொண்டு வித்தியாசமாகத் தூங்குமாம். இரண்டு கண்களையும் மூடித் தூங்கினால் மூளை தன்னிச்சையாகச் செயல்படாது, மூச்சு திணறல் ஏற்படுமாம்.
- எகிப்திய நாகரிகத்தில் மக்கள் செல்லப் பிராணிகளாகச் சிறுத்தைகளை வளர்த்து வந்தனர்.

**வி. மாரி கவிதா, இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு**

## விடுகதை விடைகள்

1. சிரிப்பு 2. வாழைப்பழம் 3. வழுக்கை 4. பென்சில்
5. பலூன் 6. பட்டாசு 7. கண்ணீர் 8. வாய் 9. வானம்
10. வியர்வை

# தூரிகைத் தூரல்கள்



ச. கீர்த்தனா,
கணினிப் பயன்பாட்டியல் முதலாமாண்டு

மு. ஹரினி
இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு






பி. அபிஷ்கா
கணினிப் பயன்பாட்டியல், மூன்றாமாண்டு



ச. கீர்த்தனா
கணினிப் பயன்பாட்டியல், முதலாமாண்டு


அ.லதா
கணினிப் பயன்பாட்டியல், மூன்றாமாண்டு





ச. ஹரினி
இளம் வணிகவியல், முதலாமாண்டு

அஃப்ரா ருஷி
இளம் வணிகவியல், முதலாமாண்டு






**ச. பத்மபிரியா**
கணினிப் பயன்பாட்டியல், மூன்றாமாண்டு






**த. காவியா**
தகவல் தொழில்நுட்ப
மேலாண்மையியல், மூன்றாமாண்டு



**கு. லோகஸ்ரீ**
கணக்குப் பதிவியல் மற்றும் நிதி
இரண்டாமாண்டு



**ர. பவித்ரா**
**வணிகக் கூட்டாண்மைச் செயலறிவியல், மூன்றாமாண்டு**

**ச. சத்ய பிரியா**
**கணக்கு மற்றும் நிதியியல், இரண்டாமாண்டு**






# துறை நிகழ்வுகள்

- 75ஆம் ஆண்டு சுதந்திர நாளை முன்னிட்டு தமிழ்த்துறை விவேகானந்தர் வாசகர் வட்டம், விவேகானந்தர் பண்பாட்டு மையத்துடன் இணைந்து, 08.08.2022 அன்று துறைகளுக்கிடையே பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்தியது.
- தமிழ்த்துறை, International Applied Tamil Teamமுடன் இணைந்து, 09.09.2022 அன்று துறைகளுக்கிடையே அறிவியல் தமிழ் தந்தை மணவை முஸ்தபா நினைவு நாள் வினாடிவினா தேர்வை நடத்தியது.
- தமிழ்த்துறையில், பாரதியார் நினைவு நூற்றாண்டு நிறைவு நாளை முன்னிட்டு, துறைகளுக்கிடையே 09.09.2022 அன்று பாரதியார் கவிதைகள் ஒப்புவித்தல் போட்டி நடத்தப்பெற்றது.
- துறையில், 28.09.2022 அன்று பணி வழிகாட்டல் நிகழ்வு நடத்தப்பெற்றது. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க அயலகத் தொடர்புக் குழுவின் தலைவர், எழுத்தாளர் திரு.இராஜேந்திரன் பெருமாள், மலேசியா தெலுக் பங்ளிமா காராங் தமிழ் பள்ளியின் தலைமையாசிரியர் திரு.கி.இராஜசேரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.
- துறையில், 29.09.2022 அன்று படைப்பிலக்கியப் பயிலரங்கம் நடத்தப்பெற்றது. எழுத்தாளர் திரு. பழ. ரவீந்திரன், சிண்டிகேட் வங்கியின் பொதுமேலாளர் திரு. மதனசேகரன், சிண்டிகேட் வங்கி மேலாளராக இருந்து பணிஓய்வு பெற்ற திரு. பாரதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.


GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
45MR+6X6, Sakthi Nagar, Lakshmipuram, Chennai, Tamil Nadu 600099, India
Lat 13.133472°
Long 80.192214°
08/08/22 11:18 AM
Google


GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
OPAL BLOCK, ALLIANCE ORCHID SPRINGS, 54, Water Canal Rd, Korattur Tank, Korattur, Chennai, Tamil Nadu 600080, India
Lat 13.128143°
Long 80.192563°
09/09/22 11:14 AM
Korattur Lake Walk
Water Canal Rd
Google


GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
45HP+RQ5, Mugambigai Nagar, Madura Madanan Kuppam, Chennai, Tamil Nadu 600053, India
Lat 13.129559°
Long 80.187612°
28/09/22 11:25 AM GMT +05:30
Google




சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
தமிழ்த்துறை - சோகா தமிழ்ப்பேரவை
09.09.2022
GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
45HQ+R2R MAIN BLOCK, SOKA IKEDA COLLEGE OF ARTS AND SCIENCE FOR WOMEN, Andal Kovil Main Rd, Mugambigai Nagar, Madura Madanan Kuppam, Chennai, Tamil Nadu 600053, India
Lat 13.1296°
Long 80.187689°
09/09/22 11:22 AM
Google

நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய மின்னிதழ்



முன் அட்டை
ச. சரண்யா
இளம் வணிகவியல், இரண்டாமாண்டு
பின் அட்டை
கோ. மகாலட்சுமி
இளமறிவியல் கணினியியல், இரண்டாமாண்டு


**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.**

**Website: sokaikedacollege.in**

**E.Mail: sokaikeda@rediffmail.com, sokaikeda2000@gmail.com, sokatamilavai2021@gmail.com**